# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) பதினேழாம் நூற்றாண்டின் ஆசிய வணிகத்தின் மிக முக்கியத் துறைமுகங்கள் யாவை?

**பதில் :** 1. பதினேழாம் நூற்றாண்டில் குஜராத்தில் சூரத், கோல்கொண்டா, ஆந்திராவில் மசூலிப்பட்டினம், வங்காளத்தில் சிட்டகாங்,
2. சோழமண்டலக் கடற்கரையில் புலிக்காட் (பழவேற்காடு நாகப்பட்டினம், கேரளக் கடற்கரையில் கோழிக்கோடு ஆகியன ஆசிய வணிகத்தின் முக்கியத் துறைமுகங்களாகும்.

2) அராபிய பாரசீக வரலாற்று அறிஞர்கள் சிலரின் பெயர்களை எழுதுக.

**பதில் :** இபின் பதூதா, அல்பருனி, பெரிஷ்பா ஆகியோர் அராபிய பாரசீக வரலாற்று அறிஞர்கள் ஆவர்.

3) கங்கையும் கடாரமும் கொண்ட சோழன் என்று பெயர் பெற்றவர் யார்? ஏன்?

**பதில் :** (i) முதலாம் ராஜேந்திரன் கங்கையும் கடாரமும் கொண்ட சோழன் ஆவான்.
(ii) இவர் காலத்தில் சோழப் பேரரசு மேலும் விரிவடைந்தது.
(iii) தனது படைகளை வடகிழக்கு இந்தியாவில் கங்கை நதிவரை நடத்திச் சென்றார்.
( iv) மேலும் தனது கப்பற்படைகளை ஸ்ரீவிஜய சைலேந்திர அரசுக்கு எதிராகவும் இந்தோனேசியர்) கடாரம் (கேடர்) மற்றும் ஸ்ரீலங்காவிற்கு எதிராகவும் அனுப்பி வைத்தார்.
(v) இவ்வாறு கங்கையையும், கடாரத்தையும் வென்றதால் கங்கையும் கடாரமும் கொண்ட சோழன் என்று பெயர் பெற்றார்.

4) மனிதாபிமானம் என்றால் என்ன?

**பதில் :** (i) மனிதாபிமானம் என்னும் கருத்து மறுமலர்ச்சியின் மையக் கூறாகும்.
(ii) இது மனித கண்ணியத்தையும் இயல்பையும் வலியுறுத்தியது.
(iii) மறுமலர்ச்சி கால மனிதாபிமானம் பல்வேறு குணநலன்களைப் பெற்றுள்ள மனிதர்கள் அவற்றைப் பயன்படுத்தி உன்னத நிலையை அடைய வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியது.

5) மைக்கேல் ஆஞ்சலோ - குறிப்பு வரைக.

**பதில் :** (i) மைக்கேல் ஆஞ்சலோ கி.பி. (பொ.ஆ) 1475 - கி.பி.பொ.ஆ)1564 ஓர் ஓவியர், சிற்பி, கட்டடக் கலைஞர் மற்றும் ஓர் கவிஞர்.
(ii) அவர் உருவாக்கிய சலவைக்கல் சிற்பமான டேவிட் சிலை, ஒரு மாபெரும் கொலையாளியின் இளமைத் ததும்பும் வலிமையையும், ஆற்றலையும் காட்சிப்படுத்தியது.
(iii) ரோம் நகரின் சிஸ்டைன் தேவாலய மேற்கூரைகளில் வரையப்பட்ட தன்னுடைய ஓவியங்களுக்காகவும் அவர் புகழ் பெற்றுள்ளார்.

6) போர்ச்சுகல் இளவரசர் ஹென்றி ஏன் மாலுமி ஹென்றி என்றழைக்கப்பட்டார்?

**பதில் :** இளவரசர் ஹென்றி மாலுமிகளுக்கு என்று ஒரு கடற்பள்ளியை ஆரம்பித்தார். மாலுமிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ததால் அவர் மாலுமி ஹென்றி என்று அழைக்கப்பட்டார்.

7) 17 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த கிழக்கிந்திய நிறுவனங்கள் யாவை?

**பதில் :** ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி மற்றும் ஃப்ரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி போன்ற நிறுவனங்களாகும்.

8) சோழர்கால இலக்கியம் பற்றியும், சமய தத்துவ ஆய்வு நூல்களைப் பற்றியும் கூறு.

**பதில் :** சோழர் காலம் இலக்கியத்திற்கு ஒரு சகாப்தமாகும். செவ்வியல் புலவரான கம்பர் தமிழில் இராமாயணத்தை எழுதி அதை முறைப்படி ஸ்ரீரங்கம் கோவிலில் அரங்கேற்றம் செய்தார். சேக்கிழாரின் பெரிய புராணம் சிதம்பரம் கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. மேலும் கலிங்கத்துப்பரணியும், மூவருலாவும், சமய தத்துவ நூலான சங்கர

பாஷ்யம் -ஸ்ரீபாஷ்யம் ஆகியவை எழுதப்பட்ட சிறந்த படைப்புகளாகும்.

9) சோழர்கால கட்டடக்கலை, சிற்பக்கலை பற்றி கூறு.

**பதில் :** தஞ்சாவூர் பெரிய கோவிலிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும், தாராசுரத்திலும், கட்டடக்கலை பற்றி நாம் அறியலாம்.
கோவில் சுவர்களிலும், தூண்களிலும் கல் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. பேரழகும் கலை நுட்பமும் பொருந்திய செப்புச் சிலைகள் மெழுகு அச்சு முறையில் வார்க்கப்பட்டன. பிரபஞ்ச நடனமாடும் நடராஜர் (சிவன்) சிலை மிகவும் புகழ் பெற்றதாகும்.

10) பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்பட்ட இடங்களைக் கூறுக.

**பதில் :** வங்காளத்திலும் குஜராத்திலும் பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

## <u>3 மதிப்பெண் வினாக்கள்</u> 10 x 3 = 30

11) மாலிக்காபூரின் இராணுவப் படையெடுப்புகளைப் பற்றி எழுதுக.

**பதில் :** (i) கி.பி. (பொ. ஆ) 1300 களின் தொடக்கப் பத்தாண்டுகளில் அலாவுதீன் கில்ஜியின் அடிமையும். படைத் தளபதியுமான மாலிக்கபூரின் தலைமையில் தென்னிந்தியப் படையெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டது.
(ii) தென்னக படையெடுப்பில் மாலிக்காபூர் 1306 இல் முதலில் தேவகிரியைப் பிடித்துக் கொண்டான்.
(iii) பின்னர் 1310-ல் தென்னக மேற்குக் கடற்கரைப் பட்டினமான துவாரசமுத்திரத்தைத் தாக்கி கைப்பற்றினார்.

12) விஜய நகர அரசை உருவாக்கியவர் யார்? அவ்வரசை ஆண்ட வம்சாவளிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** (i) ஹரிஹரர் மற்றும் புக்கர் ஆகிய இரு சகோதரர்களால் விஜய நகர அரசு உருவாக்கப்பட்டது.
2. சங்கம வம்சம், சாளுவ வம்சம் மற்றும் துளுவ வம்சம், இவ்வரசை ஆட்சி புரிந்தனர்

13) பருத்தி நெசவில் இந்தியர் பெற்றிருந்த இயற்கையான சாதகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**பதில் :** (i)பருத்தி இழை இரண்டு இயற்கையான சாதகங்களைப் பெற்றிருந்தது.
(ii) பெரும்பாலும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் பருத்தி பயிரிடப்பட்டதால், அடிப்படையான மூலப் பொருள் எளிதாகக் கிடைத்தது.
(iii) இரண்டாவதாக தாவரச் சாயங்களைப் பயன்படுத்தி பருத்தி இழைகளின் மேல் நிரந்தரமாக வர்ணம் ஏற்றும் தொழில்நுட்பம் இந்தியர்களுக்கு ஆரம்ப காலங்களிலேயே தெரிந்திருந்தது.

14) நகரமயமாதலுக்கு உதவிய காரணிகள் யாவை?

**பதில் :** (i)நகரங்களும் சிறுநகரங்களும் தங்களின் வெவ்வேறான பொருளாதாரப் பங்கினைப் பூர்த்தி செய்தன. பெரிய நகரங்கள் பொருள் உற்பத்தி, சந்தை, நிதி மற்றும் வங்கிச் சேவைகள் ஆகியவற்றின் மையங்களாகத் திகழ்ந்தன.
(ii) போக்குவரத்துச் சாலைகள் சந்திக்கின்ற இடங்களில் அமைந்திருந்தன. இச்சாலைகள் இந்நகரங்களை நாட்டின் ஏனைய பகுதிகளோடு இணைத்தன.
(iii) சிறுநகரங்கள் உள்ளூர் சந்தை மையங்களாகச் செயல்பட்டு அருகேயிருந்த கிராம உட்பகுதிகளை இணைத்தன. நாட்டின் தலைநகரங்களும் (எடுத்துக்காட்டாக டெல்லி, ஆக்ரா) பிராந்திய நகரங்களும் (பாட்னா, அகமதாபாத், லக்னோ) அரசியல் மற்றும் நிர்வாக மையங்களாகச் செயல்பட்டன.

15) பட்டு வளர்ப்பு என்றால் என்ன?

**பதில் :** (i) மல்பெரி பட்டுப்பூச்சிகளை வளர்த்துப் பட்டு உற்பத்தி செய்யும் முறை பட்டுவளர்ப்பு எனப்படும். இது பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் அறிமுகமானது.
(ii) ஏழாம் நூற்றாண்டில் உலகிலேயே அதிக அளவிலான பட்டு உற்பத்தி செய்யும் பகுதியாக வங்காளம் திகழ்ந்துள்ளது.

16) தக்காணத்தின் ஐந்து சுல்தானியங்கள் யாவை?

**பதில் :** i) பிஜப்பூர்
ii) கோல்கொண்டா
iii) அகமது நகர்
iv) பீரார்
v) பீடார்

17) முஸ்லிம் சுல்தானியங்களைப் பற்றிய அராபிய பாரசீக வரலாற்று அறிஞர்கள் எழுதிய குறிப்புகள் யாவை?

**பதில் :** 1. இபின் பதூதா, அல்பரூனி, பெரிஷ்டா ஆகியோர் சிறந்த அராபிய பாரசீக வரலாற்று அறிஞர்களாவர்.
2. இவ்வரலாற்று அறிஞர்கள் இடைக்கால இந்தியாவின் அரசர்கள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பற்றிய முக்கிய செய்திகளைக் குறிப்பிடுகின்றனர்.
3. இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி குறித்து ஒரு மாற்று வரலாற்றுக் கருத்தை அதுவும் சமகால முஸ்லிம் வரலாற்று அறிஞர்களின் நேரடி அனுபவத்தின் அடிப்படையில் உருவான கருத்தை அவை முன்வைப்பதால் அவை மதிப்புமிக்க வரலாற்றுச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன.

18) விஜயநகரப் பேரரசுக்கு விசுவாசமான மூன்று முக்கிய நாயக்க அரசுகள் யாவை?

**பதில் :** i) மதுரை
Ii) தஞ்சாவூர்
iii) செஞ்சி

19) மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களில் இரண்டினைக் கூறுக.

**பதில் :** 1. ஔரங்கசீப் மீண்டும் பழமைவாத இஸ்லாமிய நிர்வாக நெறிமுறைகளைப் பின்பற்றியதால் ராஜ புத்திர அரசர்களும் இந்துக்களும் அந்நியப்படுத்தப்பட்டனர்.
2. பேரரசு ஒரு அளவைத் தாண்டி விரிவடைந்துவிட்டதால் தனது ஆட்சியை கட்டுப்படுத்த முடியாமல் தள்ளாடியது.

20) இந்தியாவின் ஏற்றுமதிப் பொருட்கள் யாவை?

**பதில் :** 1. துணி, மிளகு, விலைமதிப்பு மிக்க நவரத்தினக் கற்கள், வைரம் அதுவும் இந்தியாவில் மட்டுமே கிடைக்கக்கூடிய வைரம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ததில் இந்தியா ஒரு முக்கிய ஏற்றுமதி நாடாக இருந்தது.
2. மேலும் ஒட்டுமொத்த ஆசியப் பகுதியில் பெருமளவில் தேவைப்பட்ட இரும்பையும் எ்கையும் ஏற்றுமதி செய்த நாடுகளில் இந்தியா முக்கியமான ஒன்றாகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

21) கி.பி.(பொ.ஆ.) 1526 முதல் 1707 வரையிலான அரசியல் மாற்றங்களை விவாதி.

**பதில் :** (i) கி.பி. (பொ.ஆ.பி) 1526 ஆம் ஆண்டு பானிபட் போரில் இப்ராஹிம் லோடியை வெற்றி கொண்டு பாபர் மொகலாயப் பேரரசை நிறுவினார்.
(ii) முதல் ஆறு மொகலாயப் பேரரசர்கள் "மாபெரும் மொகலாயர்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றனர்.
(iii) அவர்களில் கடைசி மாபெரும் மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் ஆவார்.
(iv) அக்பர் நாடுகளைக் கைப்பற்றியதன் மூலம், ராஜஸ்தானத்து சமயம் சார்ந்த அரசுகளோடு நல்லுறவைப் பேணியதின் மூலமும் தனது பேரரசை ஒருங்கிணைத்து வலிமைப்படுத்தினார்.
(v) ஔரங்கசீப்பிற்குப் பின் மொகலாயப் பேரரசு பலவாறாகப் பிரிந்திருந்தாலும், அதனை கி.பி (பொ.ஆ) 1857 ஆம் ஆண்டு பிரிட்டிஷார் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.
(vi) மகாராஷ்டிராவில் 17 ஆம் நூற்றாண்டில் ஒரு அதிகாரமையம் எழுச்சி பெற்றது. சிவாஜியின் தலைமையில் மாரத்தியர்கள் மேற்கு இந்தியப் பகுதிகளில் மொகலாயரின் அதிகாரத்தைப் பெருமளவில் மதிப்பிழக்கச் செய்தனர்.
(vii) மொகலாயப் பேரரசு அதன் உச்சியில் இருந்த போது இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பரவியிருந்தது.
(viii) கேரளத்தின் தென் மேற்குப் பகுதி, தென் தமிழகப் பகுதிகள் மட்டுமே மொகலாயரின் நேரடி ஆட்சிக்கு உட்படாத பகுதிகளாக இருந்தன.

22) இடைக்கால இந்தியாவில் ஏற்பட்ட வணிக வளர்ச்சியினை விளக்குக.

**பதில் : வணிகம்:**

(i) மிகப்பெரும் உற்பத்தித் துறையானது முக்கியமாக சொந்தப் பயன்பாட்டிற்காக அல்லாமல் பரிமாற்றத்திற்காகவே பொருட்களை உற்பத்தி செய்தது.

(ii) பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்காக இந்தியா விரிவான சந்தையைப் பெற்றிருந்தது. செலாவணி என்பது பண்டமாற்றமாகவே இருந்தது.

**வணிக மையங்கள் :**

(i) நகரங்கள் எப்போதும் முக்கிய வணிக மையங்களாகச் செயல்பட்டன. இந்நகரங்கள் பல சாலைகளால் இணைக்கப்பட்டிருந்ததால் வணிகத்தில் இடைநிலை முனையங்களாகச் செயல்பட்டன.

(ii) இத்தரைவழி வணிகத்தோடு நாட்டின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைப்பகுதி வணிகத்தில் சிறு கப்பல்களும் படகுகளும் பயன்படுத்தப்பட்டன.

**கடல் வணிகம்:**

(i) நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் (சூரத், மசூலிபட்டிணம், கோழிக்கோடு) கடல்சார் வணிக முனையங்களாகவும் செயல்பட்டன.

(ii) இந்தியப்பெருங்கடலின் குறுக்காக, கிழக்கே சீனா முதல் மேற்கே ஆப்பிரிக்கா வரை விரிந்து பரந்திருந்த கடல் வணிகம் நூற்றாண்டுகளுக்கு செழித்தோங்கியது.

(iii) பதினேழாம் நூற்றாண்டில் குஜராத்தில் சூரத், கோல்கொண்டா, ஆந்திராவில் மசூலிபட்டினம் வங்காளத்தில் சிட்டகாங், சோழமண்டலக் கடற்கரையில் புலிக்காட் (பழவேற்காடு), நாகப்பட்டினம். கேரளக் கடற்கரையில் கோழிக்கோடு ஆகியன ஆசிய வணிகத்தின் முக்கியத் துறைமுகங்களாகும்.

**ஏற்றுமதி:**

(i) துணி, மிளகு, விலைமதிப்புமிக்க நவரத்தினக்கற்கள் சற்றே விலைமதிப்புக் குறைந்த நவரத்தினக் கற்கள்- முக்கியமாக வைரம் அதுவும் இந்தியாவில் மட்டுமே கிடைக்கக் கூடிய வைரம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ததில் இந்தியாவும் ஒரு முக்கிய ஏற்றுமதி நாடாக இருந்தது.

ii) இரும்பையும் எஃகையும் ஏற்றுமதி செய்த நாடுகளில் இந்தியா முக்கியமான ஒன்றாகும்.

**இறக்குமதி:**

(i) சீனாவிலிருந்து பட்டு, சீன செராமிக் ஓடுகள், தங்கம்,நறுமணப் பொருட்கள், நறுமண மரங்கள். கற்பூரம் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன. பட்டு, மருந்து வகைகள், சாய மரங்கள், சர்க்கரை ஆகியன பாரசீகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கியப்பொருட்களாகும். தங்கம், தந்தம் ஆகியவை ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

(ii) ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் இந்திய வணிகர்களோடு தங்களுக்குத் தேவையானப் பொருட்களைப் பெற்றுத்தரவும் தாங்கள் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்தவற்றை விற்றுத்தரவும் ஒப்பந்தங்களை மேற்கொண்டன.

(iii) ஐரோப்பிய வணிக வாய்ப்புகளைப் பயன்படுத்தி இந்திய வணிகர்கள் பயனடைந்தனர்.

23) " தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னதக் காலம்" விளக்கவும்.

**பதில் :** (i) சோழர்கள் காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் செழிப்புமிக்க காலமாகும்.

(ii) இக்காலத்தில் வணிகமும் பொருளாதாரமும் விரிவடைந்தன. நகரமயமாதலும் இவற்றுடன் இணைந்து கொண்டது.

(iii) சோழர்கள் காலத்தில் நிர்வாக இயந்திரமானது மறுசீரமைக்கப்பட்டது. உள்ளாட்சி நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம் (ஊர்) ஆகும். அதற்கு அடுத்தவை ஊர்களின் தொகுப்பான 'நாடு' மற்றும் 'கோட்டம்' (மாவட்டம்) என்பனவாகும்.

(iv) பிராமணர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட வரிவிலக்கு அளிக்கப்பட்ட கிராமங்கள் 'பிரம்மதேயம்' என்றறியப்பட்டன. சந்தைக் கூடுமிடங்களும் சிறுநகரங்களும் 'நகரம்' என்றழைக்கப்பட்டன.

(v) ஊர், நாடு, பிரம்மதேயம், நகரம் ஆகிய ஒவ்வொன்றும் தனக்கென ஒரு மன்றத்தைக் (சபை) கொண்டிருந்தது.

(vi) நிலங்களையும், நீர்நிலைகளையும், கோவில்களையும் பராமரித்து மேலாண்மை செய்வது. உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பது அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வரிகளை வசூல் செய்வது ஆகியவை, இம்மன்றங்களின் பொறுப்புகளாகும்.

(vii) வேளாண்மை மற்றும் வணிகத் துறைகளில் பல புதிய வரிகள் அறிமுகம் செய்யப்பட்டன.

(viii) அதிக எண்ணிக்கையில் கோவில்கள் கட்டப்பட்டன. இது இரண்டு பரிமாணங்களைக் கொண்டிருந்தது. ஒன்று புதிய கோவில்கள் கட்டப்பட்டன. இரண்டாவது ஏற்கனவே உள்ள கோவில்கள் பலமுனைச் செயல்பாடுகளைக் கொண்ட சமூகப் பொருளாதார நிறுவனங்களாக மாறியதாகும்.

(ix) கோவில்கள் வழிபாட்டிற்கான இடங்களாக மட்டுமல்லாமல் முக்கிய பொருளாதாரப் பண்புகளைக் கொண்ட நிறுவனங்களாகவும் மாறின.

24) சோழர்களின் இலக்கியம் மற்றும் கட்டடக்கலை பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.

**பதில் : இலக்கியம்:**

(i) சோழர்களின் காலம் குறிப்பிடத்தகுந்த பண்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு சகாப்தமாகும்.

(ii) மிக நன்கறியப்பட்ட செவ்வியல் புலவரான கம்பர் தமிழில் இராமாயணத்தை எழுதி, அதை முறைப்படி ஸ்ரீரங்கம் கோவிலில் அரங்கேற்றம் செய்தார்.

(iii) சோழரின் பெரியபுராணமும், கலிங்கத்துப் பரணியும், மூவருலாவும் எழுதப்பட்டது இக்காலத்தில் தாள்.

**கட்டடக் கலை :**

(i) சோழர்களின் பெரும் சிறப்பு வாய்ந்த கட்டடக்கலையை தஞ்சாவூர் பெரிய கோவிலிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலும், தாராசுரத்திலும் காண முடிகிறது.

(ii) கோவில் சுவர்களிலும் தூண்களிலும் கல் சிற்பங்கள் செதுக்கப்பட்டன.

(iii) பேரழகும் கலைநுட்பமும் பொருந்திய செப்புச் சிலைகள் மெழுகு அச்சு முறையில் வார்க்கப்பட்டன.

(iv) பிரபஞ்ச நடனமாடும் நடராஜர் (சிவன்) சிலை சோழர்கால செப்புச்சிலைகளில் மிகவும் புகழ் பெற்றதாகும்.

25) சீக்கிய மதம் பற்றியும் 16ம் நூற்றாண்டில் பிற மதங்கள் இருந்ததையும் விவரி,

**பதில் :** 1. சீக்கிய மதம் பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் வாழ்ந்த குருநானக் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

2. பேரரசர் ஔரங்கசீப் மேற்கொண்ட கடுமையான அடக்குமுறையையும் மீறி சீக்கிய மதம் வலுவாக வளர்ச்சியடைந்தது.

3. ஆகவே பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா முழுவதும் பல மதங்கள் ஒரே நேரத்தில் இருந்துள்ளன.

4. யூதர்களும், ஜொராஸ்டியர்களும் (பார்சிகள்) குடிபெயர்ந்தபோது அந்நிய மதங்களும் இந்தியாவிற்குள் வந்தன.

5. பார்சிகள் குஜராத்திலும், யூதர்கள் கோளத்திலும் குடியேறினர். போர்ச்சுகீசியர்கள் கேரளாவிற்கு வந்த பின்னர் கிறித்துவ மதம் வேர்விட்டது. இந்த மதம் பதினெட்டாம் நூற்றாண்டு கால தொடக்கத்தில் பல பகுதிகளில் பரவியிருந்தது.

6. மேலும் சமய நீதிமன்றங்களின் அடக்குமுறையின் கீழ் வற்புறுத்தப்பட்டதாலும், ஏசுசபையைச் சார்ந்த சமய பரப்பாளர்களாலும் பாண்டிய நாட்டின் கடற்கரைப் பகுதிகளிலும் பரவியது.